REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

உலக யுத்தமே வராது!

✶

பூனா, ஜன. 31—

" இந்தியாவும் ரஷ்யாவும் ஒன்றுபட்டு நின்ருல் எதிர்காலத்தில் உலக யுத்தம் தோன்றுவதற்கு சந்தர்ப்பமே இல்லை "

என்று, ரஷ்ய பாதுகாப்பு மந்திரி மார்ஷல் ஜுகாவ், நேற்று இங்கு தனக்கு நடைபெற்ற விருந்தொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிருர்.

மலர் 4] சென்னை: தை 19௳ வெள்ளி (1—2—57) ★ ★ வெளியீடு: தை 20௳ சனி (2—2—57) [இதழ் 202

தி. மு. க. மீது நேரு பண்டிதர் பாய்ச்சல்

வானமே இடிந்து விழுந்தாலும் திராவிட நாடு அமையவிடமாட்டாராம்

'ஒற்றுமை' இல்லையாம்; என்ருலும் எந்தச் சக்தியாலும் இந்தியாவைப் பிரிக்க முடியாதாம்

இன்னுமொரு 'பாகிஸ்தானு'க்கு இடம் கிடையாதாம்

கோரிக்கை இருபதாம் நூற்ருண்டுக்கு உகந்தது அல்லவாம்!

"நாம் பிரிவினை—பிளவு மனப்போக்கிற்கு தாராளமாக இடம் தந்து வந்திருக்கிருேம் என்று நமது சரித்திரம் கூறுகிறது—நமது தவறுகளையும் குறைபாடுகளையும் மறைப்பதில் பயனில்லை.

"நீண்ட நெடுங்காலமாக இந்திய மக்களோடு இந்த பிரிவினை மனப்போக்கு, இயல்பானதாகவே இருந்துவந்திருக்கிறது.

"பிரிட்டிஷ் ஆட்சியின் ஒரே ஒரு நல்ல காரியம்—அதனை எதிர்த்துப் போரிடுவதற்கு நாம் எல்லாம் ஒன்றுபடுமாறு அது நிர்ப்பந்தம் செய்ததுதான். பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராகப் போராட அந்த ஆட்சியே நம்மிடை 'ஒற்றுமை'யை உருவாக்கிற்று.

"ஆனல் உண்மையில், இந்த 'இந்தியாவின் ஒற்றுமை'யை விரிவான பலனுள்ள முறையில் உருவாக்க முதன் முதலாக முயற்சித்தவர் காந்தியார்தான். அந்த முயற்சி, 'சுதந்திரம்' முதலிய பலன்களையும் தந்தது. ஆனலும், நாம் எத்தனை சீக்கிரம் பல பிரிவினர்களாகிவிடுகிருேம் என்பதை நீங்கள் காணப் போகிறீர்கள்.

" இந்த மாநிலப் புனரமைப்பு விவகாரத்தைத்தான் எடுத்துக்கொள்ளுங்களேன்—ஒரு முடிவு சரியானதோ தவருனதோ, அதற்காக மக்கள் கொள்ளை, கொலை நடத்துவதும மண்டையை உடைத்துக்கொள்ளுவதும் விபரீதமானதல்லவா?

" இது, நம்மிடமுள்ள இயல்பான பலவீனத்தைக் காட்டவில்லையா?"

—என்று கூறி, நேற்று மாலை சென்னை ஐலண்டு மைதானத்தில் பேசிய பண்டித நேரு அவர்கள், இந்தியாவில் இன்று 'ஒற்றுமை' நிலவவில்லை என்பதை உறுதிசெய்துவிட்டு, தி. மு. கழகத்தின்மீது ஆவேசமான தாக்குதலில் ஈடுபட்டார்.

அவர், இந்தியாவில் இப்போது தேவைப்படுவதெல்லாம், 'உணர்வு பூர்வமான ஒற்றுமைதான்' என்று எடுத்துரைத்திருப்பதின் மூலம், இந்தியாவில் மக்களிடை, 'எல்லோரும் இந்தியர்' என்று கருதும்—உணரும் ஒற்றுமை இல்லை என்பதை ஒப்பிவிட்ட பிறகும், திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது பாய்ந்து தாக்கியிருக்கிருர்.

கழகத்தின் திராவிட நாடு இலட்சியம் குறித்து அவர் கூறியதாவது :—

'இங்கேயுள்ள வகுப்புவாதக் கட்சிகளில் ஒன்று, பார்ப்பனர்களை வெளியேற்றுவது என்ருே, அல்லது இந்தியாவிலிருந்து விடுபட்ட சுதந்திரமான ஒரு தமிழ் நாடு அல்லது திராவிட தேசம் அமைக்க வேண்டும் என்ருே கோரி வருகிறது இவை எல்லாம், அவலமானவை என்பதற்கும் அப்பால் கோமாளித்தனமான— நகைப்பிற்குரிய ஒரு அம்சத்தையும் கொண்டதாகும்.

'கோமாளித்தனமானது என்பதற்குக் காரணம், எந்த ஒரு விவேகியும், இதுபோன்ற முட்டாள்தனமானவற்றைச் சொல்லுவது. இது அவலமானது என்பதற்குக் காரணம், ஏராளமான மக்கள் இந்த முட்டாள் தனமான கூச்சலுக்குச் செவி மடுப்பது; சில நேரங்களில் பலாத்காரமான வழிகளை நாடுவதுதான்.

"ஒன்று மட்டும் முக்காலும் நிச்சயமதான். வானமே இடிந்து விழுந்தாலும், இந்தியாவின எந்த ஒரு பாகத்தையும் இந்தியாவிலிருந்து பிரித்துசெல்ல விடமாட்டோம். இந்தியாவை எதுவும் பிரிக்கமுடியாது. இந்தியாவிலோ இந்தியாவிற்கு வெளியிலோ எந்தச் சக்தியாலும், இந்தியாவைப் பிரிக்க முடியாது.

" இந்தியாவின் எந்த ஒரு பாகமும், இந்தியாவை விட்டுப் பிரிக்கப்பட முடியாது. இதை, தெளிவாகப் புரிந்துகொள்ளட்டும். ஏற்கனவே ஒரு பாகிஸ்தான் ஏற்பட்டுவிட்டது; இனியும் ஒன்று ஏற்படச் சம்மதிக்கமாட்டோம்—என்ன நிகழ்ந்தாலும்"!

ஆத்திரத்தோடு ஆவேசம் கொப்பளிக்க, நமது திராவிட நாடு இலட்சியம் குறித்து இவ்வாறெல்லாம் பேசிய பண்டிதர் தொடர்ந்து கூறியதாவது:—

" (திராவிட நாடு வேண்டும் என்ற) இந்தக் கோரிக்கையின் அர்த்தம்தான் என்ன? வாதம்தான் என்ன?

'அது, காட்டுமிராண்டிக் கால மனுேநிலைக்குத் துரத்துவதாகும்; அது ஒரு புத்திசாலித்தனமான — தர்க்கரீதியான இருபதாம் நூற்ருண்டுக்குரிய எண்ணம் அல்ல; அது, பத்தாம்பசலித்தனமான எண்ணமாகும்.

"நாம் காட்டுமிராண்டிக் காலத்திற்குப் போகப் போகிருேமா? இது என்னைத் திகைக்கவைக்கிறது.'

இந்த நிலையில் 'என்ன கட்சி அது...?' என்று பின்னல் திரும்பி பண்டிதர் கேட்டபோது, காமராசர், திராவிட முன்னேற்றக் கழகம் என்று இருமுறை கூறியும், இதனை உச்சரிக்க முடியாத பரிதாபகரமானநிலை ஏற்படவே தொடர்ந்து பண்டிதர் பேசியதாவது:—

" இந்த (திராவிட நாடு அமைய வேண்டும் என்ற) எண்ணம் பழைய காட்டுமிராண்டிக் காலத்திற்குத் துரத்துவதாகும். இவற்ருல், விவேகம் படைத்த சென்னை ராஜ்ய மக்கள் தவருன வழி செல்லமாட்டார்கள் என்று நான் திடமாக நம்புகிறேன்.

" எனவே, இன்று இந்தியாவின் பிரதானமான விஷயம் எல்லாம், இந்தியாவில் உணர்வு பூர்வமான ஒற்றுமை ஏற்பட வேண்டும் என்பதுதான் என்று கூற விரும்புகிறேன்.

"எனவேதான் நான் கூறுகிறேன்—இந்தியாவில் எதிர்ப்பு என்பது, ஒரு கட்சி எதிர்ப்பு அல்ல.

"ஆனல், நமது குறைபாடுகளால் எழும் எதிர்ப்பு—நமது ஒற்றுமை இன்மையால் எழும் எதிர்ப்பு—இந்தியாவின் ஒற்றுமை என்ற கருத்தை முழுவதுமாக நிராகரிக்கும் எதிர்ப்பு இன்று இந்தியாவில் இருக்கிறது. எனவே, இந்தியாவில் ஒற்றுமை உருவாக வேண்டும் என்பதே பிரதானமானதாகும்."

'ஐ. நா. போலீஸ் படை அனுப்ப வேண்டும்'

'காஷ்மீர் மக்களிடை வாக்கெடுப்பு நடத்த வேண்டும்'

நியூயார்க், சன. 31—

காஷ்மீர் விவகாரத்தைத் தொடர்ந்து விவாதிப்பதற்கு நாள் நிர்ணயிக்காமல் இன்று ஐ. நா. பாதுகாப்பு சபை கலைந்தது.

பாகிஸ்தான் கோரிக்கை

காஷ்மீரிலிருந்து இருதரப்பு இராணுவங்களையும் வெளியேற்ற ஐ. நா. போலீஸ் படை ஒன்றை அனுப்பி, தகராறுக்கு முடிவு காணவேண்டும் என்று பாகிஸ்தான் வெளிவிவகார இலாகா மந்திரி பெரோஸ் நூன் கான் கோரியிருக்கிருர்.

சபை ஒத்திவைக்கப்படுவதற்கு முன்பு கிருஷ்ணமேனன், தனக்கு பாகிஸ்தான் பிரதிநிதி எழுப்பியுள்ள கேள்விகளுக்குப் பதிலளிக்க அவகாசம் தரப்பட வேண்டும் என்று கோரியிருக்கிருர்.

வாக்கெடுப்பு

'காஷ்மீரில் உள்ள எல்லாத் தரப்பு இராணுவங்களையும் வாபஸ் பெறச் செய்து, ஐ. நா. மேற்பார்வையில் ஒரு வாக்கெடுப்பு நடத்தி, காஷ்மீர் மக்கள் இந்தியாவுடன் இணைவதா—பாகிஸ்தானுடன் இணைவதா என்பதை முடிவுசெய்ய வேண்டும்,' என்று பெரோஸ் கான் நூன் கோரியிருக்கிருர்.

சங்கு—கணேசன் உண்ணுவிரதம்

கா. அப்பாதுரையார் சந்திப்பு

சென்னை, பிப். 1—

சென்னை மாநிலத்திற்குத் 'தமிழ் நாடு' எனப் பெயரிடக் கோரி, கடந்த 15 நாட்களாக உண்ணுநோன்பிருக்கும் சங்கு—கணேசன் அவர்களை, பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார் அவர்கள் நேற்று சந்தித்துப் பேசியுள்ளார்.

அவருடைய கோரிக்கைகள் நியாயமானவை என்றும், அக்கோரிக்கைகளை நிறைவேற்றி வைப்பதற்குத் தன்னல் இயன்ற வரையில் பாடுபடுவதாகவும் அவர் உறுதிமொழி கூறியுள்ளார்.

'ரவுடித்'தனத்தைக் கைவிட முயற்சி!

கம்யூனிஸ்டுகள் செயல்முறை மாற்றம்!

சாத்தூர்க்குடி, பிப். 1—

'ரவுடித்தனம் ஒழிக' என்று முழக்கமிட்டுக் கொண்டு 400 பெண்கள் இங்கு 27-ந்தேதி ஊர்வலம் வந்தனர். அவர்கள் சப்-கலெக்டரிடம் ஒரு மனு கொடுத்தனர்.

ஊர்வலத்தில் பெண்கள், 'ரவுடித்தனம் ஒழிக! பெண்களைத் தாக்கியவர்மீது நடவடிக்கை எடு' என்று முழக்கமிட்டனர். சப்-கலெக்டர் சி. பி சீனிவாசனிடம் ஒரு மனு கொடுத்தனர்.

பெண்களைத் தாக்கியவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதாக சப்-கலெக்டர் அறிவித்தார்.

—'தினத்தந்தி' 1—2—57

பாட்னுவில் போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம்

இருவர் பலி; பலருக்குக் காயம்

பாட்ன, சன. 31—

பாட்ன மாவட்டத்தைச் சேர்ந்த மீர்ச்சைகஞ் பகுதியில், ஒரு மக்கள் கூட்டத்தினமீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தி இருவரைப் பலி கொண்டுள்ளனராம், போலீசார்! பலருக்குப் படுகாயமாம்!

காரணம்?

இதற்குக் காரணம், தாங்கள் கைது செய்த இருவரைத் தங்களிடமிருந்து விடுவித்துக் கொண்டு செல்ல கிராமவாசிகள் முயற்சித்துத் தாக்குதல் நடத்தி, கத்தி கொண்டு போலீஸ் சப்-இன்ஸ்பெக்டரைக் காயப்படுத்தி அட்டகாசம் செய்ததுதான் என்று போலீசார் கூறுகின்றனர்.

கொள்ளை

கைது செய்யப்பட்ட இருவரும் பல கொள்ளை வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்களாம்.

அவர்களிடமிருந்து ஒரு கைத்துப்பாக்கியும் சில ரவைகளும் கைப்பற்றப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

வெகு நாகரீகமாகவே நடனமாடினர்...!

சாந்திநிகேதன், ஜன 31—

இங்கு வந்துள்ள சீனப் பிரதமர் சௌ-என்-லாய், 'சங்கீத பவ'னில் ஒரு நாட்டிய நிகழ்ச்சியைக் கண்டு கொண்டிருந்தார்; உற்சாகம் மிகுந்த நிலையில் அவர், இசை மீட்டிக் கொண்டிருந்த ஒருவரிடம் ஒரு இசைக் கருவியை வாங்கி, தாளம் தவருமல் இசை எழுப்பி, நடைபெற்றுக்கொண்டிருந்த மணிபுரி நடனத்தில் தானும் பங்கு பெற்ருர் என்று தெரிகிறது

விஸ்வபாரதி பல்கலைக் கழகத்திற்கு ரூ. 6 ஆயிரம் தந்திருக்கிருர், சௌ-என்-லாய்.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 1—2—'57 வெள்ளி

ஆழந்தெரியாமல் காலைவிடாதீர்!

★

முன்னேற்றக் கழகத் தலைவர்கள் சிறுவர்கள் என்றும், அவர்களிடம் ஆட்சிப் பொறுப்பை வாக்காளர்கள் ஒப்படைக்கக்கூடாது என்றும் அமைச்சர் அழகேசனர் பேசி வரும் பேச்சுக்கு நேற்று மறுப்புக் கூறி இருந்தோம். அவர் கூற்றில் உள்ள முரண்பாட்டையும் தேர்தல் சட்ட விதியையும் சுட்டிக் காட்டித் தெளிவுபடுத்தி இருந்தோம்.

இன்று, முன்னேற்றக் கழகத்தைக் 'குழந்தை'க் கட்சி என அவர் கூறியுள்ள பொருந்தாக் கூற்றுக்குப் பதில் தருகிறோம்.

நமது முன்னேற்றக் கழகம் வயது முதிர்ந்த கட்சி அல்ல என்ற அமைச்சரின் மதிப்பீட்டை நாம் அப்படியே ஏற்றுக்கொள்ளுகிறோம். ஆனால் நம்மை சிறிய கட்சி எனக் கூறுகின்ற அமைச்சரின் கட்சியான காங்கிரசுக் கட்சி, நாடாளும் துறையைப் பொறுத்தவரையில் மிக மிகச் சிறிய கட்சிதானே? இந்த உண்மையை அமைச்சர் மறந்து விட்டதும் ஏனோ?

ஆட்சிப் பொறுப்புக்கு மிக இளைய கட்சியாகக் காங்கிரசுக் கட்சி இருந்த காரணத்தினுல் அல்லவா, நாடாளப் புகுந்த காங்கிரசுக் கட்சியினர், தங்கள் கட்சியிலேயே ஆள் கிடைக்காது அவதிப்பட்டு, வெட்கத்தையும் வீராப்பையும், துக்கத்தையும் கதர்க் குல்லாய்க்குள் மறைத்துக்கொண்டு, நிதிப் பொறுப்பை நிர்வாகம் செய்ய முதல்முதலாகக் காலஞ்சென்ற சர். ஆர். கே. சண்முகம் அவர்களை அணைத்துக்கொண்டனர்?

அதேபோன்று, சட்டத் துறையைத் திறமையுடன் நடத்திவரக் காலஞ்சென்ற டாக்டர் அம்பேத்காரை அமைச்சர்களில் ஒருவராக ஏற்றுக்கொண்டனர்?

காங்கிரசுக் கட்சியின் நாடாளும் அறிவுப் பஞ்சம் அவ்விருவரையும் வேண்டாவெறுப்பாக அணைத்துக்கொண்ட அளவுடனும் தீர்ந்து போகவில்லையே! அதன் பிறகு, இன்றுவரையும் அதே அறிவுப் பஞ்ச நிலையில் தானே காங்கிரசுக் கட்சி இருந்துவருகிறது!

சர். சண்முகம் பதவியைத் துறந்ததும், துணை அமைச்சர் அழகேசனரிடமா நிதிப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது? இல்லை — இல்லவே இல்லை!

காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்திலாத மற்றொரு ஜான் மத்தாய் அவர்களிடம அல்லவா அப்பொறுப்பைக் காங்கிரசுக் கட்சி ஒப்படைத்திருந்தது!

அதன் பிறகும், நிதிப் பொறுப்பை நிர்வகிக்கக்கூடிய அறிவாற்றல் படைத்த ஒரு ஆளும, காங்கிரசுக் கட்சிக்குக் கிடைக்கவில்லை. மீண்டும், காங்கிரசாராக இல்லாத சிந்தாமணி தேஷ்முக் எனப் பெயரிய ஒரு 'சிவலிய'ரிடமல்லவா, நிதி அமைச்சர் பதவி ஒப்படைக்கப்பட்டிருந்தது?

அவர் விலகிய பிறகு மட்டும், அப்பதவிக்குரிய ஆள் காங்கிரசுக் கட்சியில் கிடைத்தா விட்டதா? அதுவும் இல்லை.

ஆங்கில வியாபாரிகளின் அடிவருடியான—அசல் 'ஏகாதிபத்திய எடுபிடி'யான டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரிடம் அல்லவா நிதிப் பொறுப்பு, காங்கிரசுக் கட்சியால் தரப்பட்டு இருக்கிறது?

நிர்வாக ஞானசூன்யத்திற்குப் புகழ் பரப்பிவரும் ஒரு கட்சியாகக் காங்கிரசுக் கட்சி இருக்கும்பொழுதுதான், நமது முன்னேற்றக் கழகத்தைக் குறித்து நாடாளப் பக்குவமில்லாத இளம் பருவத்தில் இருக்கும் கட்சி என கையாண்டி பேசுகிருர் அமைச்சர் அழகேசனர்! ஐயோ பாவம்! தேர்தல் பித்தம் தலைக்கேறிவிட்டிருக்கிறது அமைச்சருக்கு—எனவே வாய் பிதற்றுகிருர் போலும்! நிற்க,

நாடாளும் வாய்ப்பை நமது கழகம் இதுவரை பெறவேயில்லை; பெறுவதற்கு முன்னலேயே நமது கழகத்தவர் நாடாளத் தெரியாதவர்கள் எனக் குறைகூற முன்வருகிருர் அமைச்சர் அழகேசனர். இது என்ன அரசியல் நியாயமோ?

அமைச்சர் குற்றச்சாட்டை விவாதத்திற்காக ஒப்புக்கொள்ளுவோம். அவர் கூறுகிறபடி நமக்கு, இந்த அமைச்சர் போல் நாடாளத் தெரியாமல் கூட இருக்கலாம். இவர் போல, நமது கழகத்தவர்தான் நாடாளுவதில் மிகச் சிறந்தவர்கள் என, இதுவரை நாம் எப்பொழுதும் பீதற்றிக்கொண்டது கிடையாது. ஆனல் இவரோ, தனது ஆளும் திறமையைத் தானே புகழ்ந்து பறை சாற்றிக்கொண்டு வருகிருர்.

இந்த இரயில்வே துணை அமைச்சரின் நிர்வாகத் திறம எத்தகையது என்பதை எடுத்துக் காட்டுவதற்கு, அரியலூர் இரயில் விபத்து ஒன்றே போதும்! அதுவும் போதாதென்றல் மெகபூப்நகர் இரயில் விபத்தையும் கூட்டிக்கொள்ளலாம்!

டில்லி அரசுகட்டிலில் ஒரு சிறு ஆளும் பதுமையாக இருக்கும் இந்த அமைச்சர்தான், நமது கழகத்தைக் குறித்து கையாண்டி பேசுகிருர்! நிற்க,

அரியலூர் இரயில் விபத்தைச் சுட்டிக்காட்டி, 'ஏன் அமைச்சர் பதவியை விட்டொழிக்கவில்லை' என்றகேள்வியை, அமைச்சரிடம் யாரோ ஒருவர் கேட்டு விட்டாராம். அதற்கு, 'எல்லா அதிகாரிகளும் பதவியைவிட்டுவிட்டால், அரசாங்கம் நடைபெறுவது எப்படி?' —எனப் பதில் கேள்வியைப் போட்டுப் பதிலளித்தாராம், அமைச்சர்!

காங்கிரசு அமைச்சர்கள் அனைவரும் அரியலூர் இரயில் விபத்துபோன்ற ஒரு விபத்தில் சிக்கி ஒரே நேரத்தில் மாண்டுபோய்விட்டாலுங்கூட, நாட்டு நிர்வாகம நின்றுவிடாது. அது வழக்கம்போல் ஆமை வேகத்தில் நகர்ந்துகொண்டுதான் இருக்கும்!

அழகேசனர் இரயில்வே துணை அமைச்சராக இருப்பவரேயல்லாது, பிரயாணச் சீட்டு விற்பவரல்ல—கை காட்டியைத் தாழ்த்தி உயர்த்துபவரல்ல—இரயில்வே துறையை ஒழுங்குபட நிர்வகித்துவரும் நிரந்தரமான பெரிய அதிகாரி அல்ல.

அந்தத் துறையைச் செயல்படுத்தும் அமைப்பே வேறு. அமைச்சர் வெளியேறிவிடுவதினுல் அந்த அமைப்பு ஆட்டங் கொடுத்துவிடாது!

காங்கிரசாட்சி ஆனுலும் கழக ஆட்சியானுலும், அந்த அமைப்புக்கு ஆபத்து வந்துவிடாது. அது நிரந்தரமாக என்றென்றும இருந்துவரக் கூடியநிர்வாக இயந்திரமாகும்.

அந்த நிர்வாக இயந்திரம் செயல்பட அடிப்படைக் கொள்கையை அமைத்துத் தருபவர்தான் அமைச்சர். அவரோ, பொதுமக்களின் விருப்பு வெறுப்புக்கேற்ப அமைச்சராகி இருப்பவர். பொதுமக்களுக்குக் கட்டுப்பட்டு பதில் சொல்லக் கடமைப்பட்டிருப்பவர்.

உண்மை இவ்வாறு இருக்க, வேறு எதையோ பதிலெனக் கூறுகிருர் இந்த அமைச்சர்!

இரயில்வே அமைச்சர் லால்பகதூர் சாஸ்திரி, அரியலூர் விபத்தின் காரணமாகத் தமது பதவியைத் துறந்தார். இவரோ துணை அமைச்சர்; ஏன் தலைமையைப் பின்பற்றி இவர்பதவியை துறக்கவில்லை என்பதுதான் கேள்வி. அதற்கு நேர்மையாக பதில் கூறவேண்டிய இந்த அமைச்சர், 'அரசாங்கம் எப்படி நடக்கும்' என்ற, துளியும் பொருத்தமில்லாத பதில் கேள்வியைப் போடுகிருர்!

இவர் பதிலின்படி 'அரசாங்கம் கெட்டொழியட்டும்' என்ற கெடு நினைப்பில்தான் லால்பகதூர் சாஸ்திரி தனது அமைச்சர் பதவியைத் துறந்திருக்க வேண்டும் என்றே பொருள் கொள்ளவேண்டியதாகிறது! அவ்வாறு பொருள் கொள்வதை இவரேகூட ஆத்திரத்தோடு மறுக்க முனைவருவார்.

டில்லி அரசாங்கம் இந்த ஒழுஙரானை நம்பியே வாழ்கிறதுபோலும்! தமது பதவிப் பித்தை மறைக்க இப்படியா முரண்படப் பேசுவது இந்த அமைச்சர்?

நமது கழகம் தேர்தல் குறிக்கோளை விளக்கி இதுவரை அறிக்கை ஒன்று வெளியிடவில்லையாம்! அது ஒரு பெரிய குற்றமாகப்படுகிறது இந்த அமைச்சருக்கு.

அதுபற்றி அவர் குறிப்பிடும பொழுது, 'நான் சொன்னேன் என்பதற்காக இனி முன்னேற்றக் கழகம் தேர்தல் அறிக்கை வெளியிட்டாலும வெளியிடக் கூடும்' என்று, தனது தலைக்கனத்தைக் காட்டிக் கொண்டு உள்ளார்!

கருத் தரித்திருந்த ஒருத்தியைப் பரிசோதித்துப் பார்த்த மருத்துவர் ஒருவர், இவள் ஒரு குழவியை இனி பெறுவாள் என உறுதி கூறினுராம். குழந்தை பிறந்ததும், தான் பரிசோதித்துச் சொன்னதால் தான் அவளுக்குக் குழந்தை பிறந்தது என்று, அந்த மருத்துவர் தன்னைத்தானே பாராட்டிக் கொண்டாராம்.

அதுபோலத்தான் இருக்கிறது, நமது கழகம் வெளியிடப்போகும் தேர்தல் குறிக்கோள் அறிக்கைபற்றிய இந்த அமைச்சரின் ஆருடமும!

'இளங் கன்று பயமறியாது' என்பதுபோல் இந்த ஒழுஙரானும் தேர்தல் வாந்தி எடுத்து வருகிருர்! ஆழம தெரியாது காலை விடாதீர் என எச்சரிப்புடன், இவர் பிரலாபத்துக்கு இப்பொழுது முற்றுப்புள்ளி வைக்கிறோம்.

நாகர்களின் கிளர்ச்சி ஓயவில்லை

டில்லி ராணுவ நடவடிக்கைகளுக்கு தோல்வியே பரிசு!

ஜோர்ஹத், சன. 30—

நாகர்களின் விடுதலைக் கிளர்ச்சியை தனது இராணுவ பலத்தைக்கொண்டு அடக்கிவிடலாம் என்று கருதி டில்லிப் பேரரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் தோல்விமேல் தோல்வியையே சந்தித்து வருவதாக, நாகர்கள் அவ்வப்போது கிளர்ந்தெழுந்து, ஆயுதந்தாங்கி நடத்தும் அட்டகாசங்கள் கூறுகின்றன.

'ஏறத்தாழ நாகமலைப் பகுதியில் அமைதி'யை நிலைநாட்டிவிட்டோம்' என்று டில்லி இராணுவத்தினர் செய்திகளை ஒலிபரப்பிக்கொண்டிருக்கும் நேரத்திலேயே, கடந்த 27-ம் தேதியன்று சுமார் 250 நாகர்கள் ஆயுதந்தரித்து, சில கிராமங்களில் புகுந்து கொள்ளை முதலிய சம்பவங்களை நிகழ்த்திய தாக இங்கிருந்து செய்தி தரப்படுகிறது.

தீவிர நாகர்கள், உணவுப் பொருள் முதலியனவற்றை மட்டுமின்றி 5 துப்பாக்கிகளையும் இராணுவத்தினரிடமிருந்தோ போலீசாரிடமிருந்தோ அபகரித்துச் சென்றுவிட்டதாகவும் தகவல் கிடைத்திருக்கிறது.

மத்தியக் கிழக்கில் படை, பண பலத்தை உபயோகிக்க

அமெரிக்க தலைவருக்கு அதிகாரமாம்

வாஷிங்டன், சன. 30—

அமெரிக்கப் பிரதிநிதிகள் சபை, மத்தியக் கிழக்கில் கம்யூனிஸ்டு ஆக்கிரமிப்பைத் தடுக்க அமெரிக்க இராணுவ பலத்தையும் பண பலத்தையும் உபயோகிக்கத் தலைவர் ஐசனேவருக்கு அதிகாரம் வழங்கும் தீர்மானத்தைப் பெருவாரியான வாக்குகளால் நிறைவேற்றியுள்ளதாம்.

தீர்மானம், இப்போது செனட் சபைக்கு அனுப்பப்பட்டுள்ளதாம்.

இந்த அதிகாரம் தனக்குத் தரப்பட வேண்டுமென ஐசனேவர், கடந்த சனவரி 5-ம் தேதியன்று காங்கிரசுக்கு விடுத்த விசேடச் செய்தியில் கோரியிருந்தார்.

'இன்றைய அங்கேரி பிரதிநிதிகட்கு ஐ.நா.-விலிருந்து கல்தா கொடுங்கள்'

'காதர் சர்க்காரை ரஷ்ய படைகளே தாங்கி நிற்கின்றன'

'போலீஸ் படைகளை அனுப்பி ரஷ்யத் துருப்புகளை வெளியேற்றுக'

ஐ. நா., சன. 29—

ஐ நா.-வில் இப்போது அங்கேரியின் பிரதிநிதிகளாயிருப்போருக்கு 'கல்தா' கொடுக்க வேண்டுமென, தோழியர் அன்ன கேத்லி என்ற முன்னள் அங்கேரிய மந்திரி கூறியிருக்கிருர்.

67 வயதான கெத்லி தான் முதன்முதலில், இம்ரி நாகி மந்திரி சபை அங்கேரியில பதவியிலிருந்த போது ஐ நா.-வுக்கு அழைக்கப்பட்டு, அங்கேரி பற்றிய ஐ நா தனிக் கமிட்டியின்முன் சாட்சியம கூறக் கேட்கப்பட்டிருந்தார்.

போலீஸ் படை அனுப்புக

"தேர்தல்கள் நேர்மையாக நடைபெறுகின்றனவா என்பதைக் கவனிக்க ஐ. நா. போலீஸ் படை ஒன்றும் அனுப்ப வேண்டும். ஐ நா, தனது செல்வாக்கைப் பயன்படுத்தி, அங்கேரியிலிருந்து ரஷ்யப் படைகள் வாபசாகுமாறு செய்ய வேண்டும்.

மக்களுக்கு விரோதமாக!

"மக்களின் விருப்பத்திற்கு விரோதமாகவே, இன்று ஐனேஸ் காதர் சர்க்கார் பதவியிலிருக்கிறது. ரஷ்யப் படைகள்தான் காதர் சர்க்காரைத் தாங்கி நிற்கிறது.

சுதந்திரம் வேண்டும்

"நாகி சர்க்காரில் மந்திரிகளாயிருந்தவர்களுக்குத் தனிப்பட்ட சுதந்திரம் வேண்டும்; இதனை ஐ நா. உறுதி செய்து கொடுக்க வேண்டும். ஏனெனில், இந்த சர்க்கார் சுதந்திரமான தேர்தலுக்கு ஏற்பாடுகளைச் செய்தாக வேண்டும்

நாகி எங்கே?

"நாகியும் அவரது சகாக்கள் 90 பேரும் ருமேனியாவில் எங்கோ ஓரிடத்தில் 'காவல்' வைக்கப்பட்டிருக்கின்றனர்"

இவையும், கெத்லி அம்மையார் கூறியிருப்பவைதான்.

எகிப்து கடற்படைக்கு நீர்மூழ்கிகளாம்!

எங்கிருந்து வந்தன என்பதுபற்றி தகவல் இல்லையாம்

கெய்ரோ, சன 30—

எகிப்து கடற்படையைப் பலப்படுத்த பல நீர்மூழ்கி (சப்மரின்)கள் வந்திருப்பதாகச் செய்தி ஒன்று கூறுகிறது.

அவை எத்தனை, எங்கிருந்து வந்தன என்பதுபோன்ற தகவல்கள் தரப்படவில்லை.

சிறிது காலத்திற்கு முன்பு இவைகளுக்காக 'ஆர்டர்' கொடுக்கப்பட்டதாகவும் சூயசில் ஏற்பட்ட நெருக்கடியால் அவை தாமதித்து வந்துள்ளதாகவும் கூறப்பட்டிருக்கிறது.

ரூ. 50,000 செலவில்!

திருப்பதி பல்கலைக் கழகத்தில் தொழிற்சாலை அமைக்க அனுமதி

திருப்பதி, சன. 28—

பல்கலைக் கழக மானியககுழு, திருப்பதி பல்கலைக் கழகத்திற்கு ரூ 50,000 செலவில் ஒரு தொழிற்சாலையை அமைப்பதற்கு அனுமதி அளித்திருக்கிறது.

'நீடூழி வாழ வேண்டும்—நன்மை செய்ய வேண்டும்'

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியனுக்கு ஏழிசை மன்னர் வாழ்த்து

சேலத்தில் இசைவாணர் அவர்களுக்குப் பொன்னுடை போர்த்து விழா

சேலம், சன. 31—

தமிழகத்தில் இசைத்துறையில் பெரும் புகழ் எய்தி 'கர்நாடகான ஏழிசை மன்னர்' என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்படும் எம். கே. தியாகராச பாகவதர் அவர்களுக்கு, தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் பொன்னுடை போர்த்தும் விழா நடைபெற்றது.

சேலம் தமிழிசைக் கழகச் சார்பில் கடந்த 22-ந் தேதி நடைபெற்ற இவ்விழாவில் பொதுச் செயலாளர் அவர்கள் தியாகராச பாகவதர் அவர்களுக்குப் பொன்னுடை போர்த்தி, 'தமிழும், தமிழிசையும்' என்பது குறித்த அரியதோர் கருத்து விருந்தளித்தார்.

தமிழிசைக் கழகம், விசுவசர்ம மகாசன சங்கம் ஆகியவை சார்பில் திரு க. நாராயணசுவாமி ஆச்சாரியார் அவர்கள், தி. மு. கழகப் பொதுச்செயலாளருக்கும் பாகவதருக்கும் மலர் மாலைகள் சூட்டி மகிழ்ந்தார். சேலம் ஏகாம்பரேசுவர காமாட்சியம்மன் தேவஸ்தான சேர்மன் அவர்களும் பொதுச்செயலாளருக்கு தமது நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்.

தியாகராச பாகவதர் அவர்கள், தி. மு. கழகப் பொதுச்செயலாளரைப் பாராட்டியும், அவர்தம் கொள்கைகளை விளக்கியும் பேசி, 'நம்முடைய நெடுஞ்செழிய மன்னர் பரம்பரைபோல் நீடூழி வாழ்ந்து நாட்டிற்குப் பல நன்மைகளைச் செய்யவேண்டும்' என்று குறிப்பிட்டு வாழ்த்தினர். (ந. - தி.)

கொள்கையைக் காற்றில்...

(4-ம் கலத்தின் தொடர்ச்சி)

தி. மு. கழகச் செயலாளர் எஸ். முத்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"உங்களுடைய அன்பால்தான் நான் வாழ்கிறேன். என்னால் பணம் தர இயலாது. தேர்தலும் வருகிறது—நானும் வருகிறேன—உங்களுடைய பேராதரவை நம்பி! யார் வந்து என்னிடம் உதவி கேட்டாலும், அவர் எக்கட்சிக்காரராக இருந்தாலும் என்னால் முடிந்ததைச் செய்வேன்; மக்கள் நலனுக்காகவே நான் என்னை அர்ப்பணித்திருக்கிறேன்."

மேலும் அவர், கம்யூனிஸ்டுகளின் பொய்ப் பிரசாரப் பித்தலாட்டத்தைக் கண்டித்துப் பேசுகையில், 'ஜனவிரோதக் கொள்கையை எதிர்ப்பவர்களுடைய வாய்களில் இன்று பச்சை வகுப்புவாதம் தெருத் தெருவாகப் படம் எடுத்தாடுகிறது' என்று குறிப்பிட்டார்.

"மதுரை வாழ் மக்கள், அரசியலில் நன்குகப் படம் போட்டு எடுக்கப்பட்டவர்கள். தி. மு. கழகம் தனது கொள்கைகளை—தனது கடந்த கால மக்கட்பணியை முன்னிறுத்திக் கேட்கிறது மக்களை—'கழகத்தின் கொள்கை நாட்டுக்கு நலம் தருமா?' என்று! எனவே, விரைவிலேயே இங்கு யார் வகுப்புவாதிகள் என்பதை மதுரை மக்கள் உணரச் செய்வார்கள்" என்றும் குறிப்பிட்டார்.

கூட்டத்தில் ஹார்வி படிப்பகத் தோழர்கள் ரூ 155-ம், இளைஞர் நிலையத்தார் ரூ 85—2—3-ம் தி. மு. கழகத் தேர்தல் நிதியாக அளித்தனர். அண்ணா, முத்து ஆகியோருக்குத் தட்டாரச் சந்து வாலிபர்கள் மலர்மாலைகள் அணிவித்தனர். (ந. தி.)

***

தேர்தல் பிரச்சாரப் பாடல்கள் :

பாழ்நிலை போக்குவீர்!

★

(காதல் வியாதி பொல்லாதது....என்ற மெட்டு)

நாட்டின் மானம் காவாதவர்—வந்தே
ஓட்டுக் கேட்பார் போடாதீர்கள்! (நாட்டின்)

வாட்டி வாட்டிநமை வதைத்து விட்டாரே
மாளாத துயர் தந்தே!—அந்த
வஞ்சம் தீர்த்திட நேரமி தன்றோ?
போடாதீர் ஓட்டு! — தமிழ் (நாட்டின்)

மட்டுமரி யாதையின்றித் துட்டத்தன மாகப்பேசி
மமதையால் ஆள்பவர்தானே!
வஞ்சனை வடவருக்குத் தஞ்சமென் றடிபணிந்து
வாழ்வினைக் கெடுப்பவர் தானே!
இந்தி—வாலாட்டம் காட்டிடவே
சூதாட்டம் போட்டுவரும்
மேலாட்ட ஆடுபவர்தானே! —தமிழ் (நாட்டின்)

பாடுபடும் ஏழைதுயர் பாராரே!—சொத்தப்
பதவிகாக் கஏதும் செய்வாரே!
துயர் செய்வாரே!—இந்தப்
பாதகரை மீண்டும் நாமே
தேர்ந்தெடுத் தனுப்பிவிட்டால்,
பாழ்நிலையே நேர்ந்திடாதா?
நேர்ந்திடாதா? —தமிழ் (நாட்டின்)

—புதுவைச் சிவம்

***

தி. மு. கழகத் தேர்தல் நிதிக்கு அன்பளிப்பு

மதுரை தியாகராசர் கல்லூரி மாணவர் நிதியளிப்பு

கடந்த 20-ந் தேதியன்று, மதுரை தியாகராசர் கல்லூரி மாணவர்கள், தி. மு. கழகத் தேர்தல் நிதிக்கு ரூ. 303 அண்ணா அவர்களிடம் தந்தனர்.

★

மலேயா தோழர் அன்பளிப்பு

29—12—56-ல் மலேயாவாழ் தோழர் பெரியசாமி அவர்களது ஆண் மகவு இளங்கோவனின் ஓராண்டு விழா சிறப்புற நடைபெற்றது. பல நண்பர்கள், உறவினர் சார்பில் வாழ்த்துக்களும் பரிசுகளும் வழங்கப்பட்டன. இதனையொட்டி தி. மு கழகத் தேர்தல் நிதிக்கு 14ஷில்லிங்குகள் அன்பளிப்பாகத் தரப்பட்டுள்ளது. வாழ்த்துகள், பரிசுகள் வழங்கிய அனைவருக்கும் பெரியசாமி—அரங்கநாயகி தம்பதிகள் தங்கள் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

★

திருப்பூர்தி.மு.க.-ஆலை தொழிலாளர்கட்கு :

"திருப்பூர் தனலட்சுமி, என் ஆர். சி. ஆசர் ஆலைகளைச் சேர்ந்த தி. மு. கழகத் தொழிலாளர்கள் அனைவரும் தி. மு. கழகத் தேர்தல் நிதிக்கு விரைவில் இயன்ற வரை நன்கொடை தருமாறும் இரசீதுப் புத்தகங்கள் பெற்றுள்ள தோழர்கள் விரைவில் நிதி சேர்க்கும் முயற்சியில் ஈடுபடுமாறும் கேட்டுக்கொள்கிறேன்"

என்று திருப்பூர் தி. மு. க. ஆலைத் தொழிலாளர் தேர்தல் நிதிக்குழுச் செயலாளர் என். பால்ராசு அறிவிக்கிறார்.

★

தி. மு. கழகத் தேர்தல் நிதி அளிக்க!

சென்னை மருத்துவர்கள் சார்பில் நிதிக் குழு அமைப்பு

சென்னை, சன. 31—

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் நிதிக்குத் தங்களாலியன்ற அளவு நிதி திரட்டித் தருவதென இங்குள்ள மருத்துவர்கள் முடிவு செய்ததையொட்டி, நேற்று முன்தினம் இங்கு நடைபெற்ற மருத்துவர்கள் கூட்டமொன்றில், தி மு கழகத் தேர்தல் நிதிக்குழு ஒன்றும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. தோழர்கள் டி பி. பிச்சாண்டீசுவரன், கே. பாஸ்கரன், வடிவேலு ஆகியோர் முறையே செயலாளர் துணைச்செயலாளர், பொருளாளராகவும், மற்றும் தோழர்கள் பதி, ஆதி. இராமச்சந்திரன், கேசன், வேலு, துரைசாமி, பெருமாள்சாமி, சுந்தரம், இராசாராம் ஆகியோரும் மேற்படி குழுவின் நிர்வாக உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இக்கூட்டம், சென்னை 30-வது வட்டத் தி. மு. கழகச் செயலாளர் மணிவண்ணன் தலைமையில் நடைபெற்றது. (ந. - தி)

***

கொள்கையைக் காற்றில் பறக்கவிட்ட குணாளர்கள்

ஓட்டுக்காக கதவுகளைத்தட்ட வருகிறார்கள்!

திட்டம் எங்கே — திறமை எங்கே என்பதை அறிந்து வாக்களியுங்கள்

மதுரை மக்களுக்கு அண்ணா வேண்டுகோள்

மதுரை, ஜன 31—

"நான் இங்கு நீண்டதோர் உரை நிகழ்த்தப் போவதில்லை; அது, பழக்கமில்லையென்பதால் அல்ல—தேவையில்லையென்று நான் கருதுவதால் அதிகம் பேசத்தேவையில்லை. நமக்கு எதிராக இருக்கின்ற காங்கிரசார், பிரமாண்டமான கூட்டங்களை நடத்தி நம் கொள்கை குறித்துத் தவறுகள் எதையாவது சுட்டிக்காட்டி வருவார்களானால் நாம் அதற்காக நீண்டநேரம் மறுப்புரை கொடுக்க வேண்டியதுதான்.

"ஆனால் காங்கிரஸ் மேடைகளில் நாம் இன்று கண்கூடாகக் கண்டு வருவதென்ன? சாதியைக் காட்டியும், வேறு பற்பலவிதமான அரசியல் மேடைகளில் பேசமுடியாத கொள்கைகளையும் காட்டிப் பேச வேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறதைக் காண்கிறோம் அது மட்டுமல்ல; காங்கிரசார் இப்போது கதவுகளைத் தட்டும் வேலையில் ஈடுபட்டிருக்கின்றனர்—ஓட்டுக்களைக் கேட்கக் கதவுகளைத் தட்டுகிறார்கள்! மதிமிக்க மதுரைத் தோழர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்—திட்டம் யாரிடத்தில் இருக்கிறதென்பதை முதலில் தெரிந்து கொள்ளுங்கள்; பின்னர், அந்தத் திட்டத்தை நிறைவேற்றி வைக்கும் திறமை யாரிடம்—எங்கு இருக்கிறதென்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். இதைத் தெரிந்துகொண்டு உங்கள் வாக்குகளைத் தாருங்கள் என்று"

இவ்வாறு, அண்ணா அவர்கள், சென்ற 27-ந் தேதியன்று மதுரையில் நடைபெற்ற மதுரை மத்தியத் தொகுதி 14, 17-வது பகுதித் தேர்தல் கிளை அலுவலகத் திறப்பு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

அண்ணா அவர்கள் மேலும் தொடர்ந்து பேசியதாவது—

"கண்ணீரும் கண்ணீரும் ஒன்றாகி விட்டது. இனிமேல் அதனை பன்னீராலோ, பணத்தாலோ தடைத்துவிட முடியாது. சட்டசபைக்குச் செல்வதின் மூலம் நாம் பல அரிய பெரிய சாதனைகளைச் சாதிக்கமுடியும். எனவே இத்தொகுதியில் போட்டியிடும் தோழர் முத்துவை வெற்றி பெறச் செய்யுங்கள்."

'படம் போட்டெடுக்கப்பட்ட மதுரைத் தோழர்கள்'

'யார் வகுப்புவாதிகள் என்பதை உணரச் செய்வர்'

மதுரை மத்தியத் தொகுதியில் போட்டியிடும் மதுரை மாவட்ட (1-ம் கலம் பார்க்க)

***

'நாடாண்ட காங்கிரஸ், நாட்டை நலிவுறச் செய்தது'

சேலம் தி. மு. க. கூட்டத்தில் என். எஸ். இளங்கோ, மற்றும் முன்னணி வீரர்கள் கருத்துரை

சேலம், சன 31—

சேலம் 19-வது வட்ட தி. மு கழகத்தின் ஆண்டு விழாப் பொதுக்கூட்டம், கடந்த 21-ந் தேதியன்று மாலை சிறப்புறக் கொண்டாடப்பட்டது.

கூட்டத்திற்குத் தோழர் பி. வி. இரங்கையா தலைமை வகித்தார்.

வரும் பொதுத் தேர்தலில் காங்கிரசை முறியடிக்கத் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மக்கள் பெரும் ஆதரவு தருமாறு கேட்டுக் கொண்டு தோழர்கள், கே. ஆர். மாசிலாமணி, இ ஆர். கிருஷ்ணன், சிற்றணி-சுப்பிரமணியம் ஆகியோர் பேசினர்.

பின்னர், தஞ்சை மாவட்டச் செயலாளர் தோழர் என். எஸ். இளங்கோ அவர்கள், கடந்த 8 ஆண்டு காலத்தில் தி மு. கழகம் நாட்டு மக்களுக்குச் செய்துள்ள அரும்பெரும் பணிகளையும், அதே நேரத்தில் நாடாண்ட காங்கிரஸ்காரர்கள் இந்த நாட்டை எங்ஙனம் கையில் குட்டிச்சுவராக்கியுள்ளனர் என்பதையும் விளக்கி, நாடு மீண்டும் நல்வாழ்வுபெற, வருகிற பொதுத் தேர்தலில் மக்கள் தி. மு. கழகத்தை ஆதரிக்குமாறு கேட்டுக்கொண்டு உரை நிகழ்த்தினார்.

தோழர் எஸ். ஏ. அன்புக்கரசு அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். (ந. - தி.)

***

வளவனூரில் தி. மு. கழகத் தேர்தல் நிதி அளிப்புக் கூட்டம்

மு. கருணாநிதி, ஏ. கோவிந்தசாமி கலந்துகொண்டனர்

வளவனூர், சன 31—

வளவனூர் தி. மு. கழகக் கிளையின் சார்பில் தி மு. கழகத் தேர்தல் நிதி அளிப்புக் கூட்டம் ஒன்று கடந்த 19-ந் தேதியன்று தோழர் எம் சண்முகம் தலைமையில் நடைபெற்றது.

தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் தி. மு. கழகத்தின் தேர்தல் ஈடுபாட்டிற்கான அவசியத்தையும், நாட்டில் இன்று நிலவுவதாகக் கூறப்படும் ஜனநாயகம் எந்த அளவு ஜனநாயகப் பண்புடன் நடக்கிறது என்பதையும் விளக்கிச் சிறிதுநேரம் பேசினார்.

இறுதியில் தோழர் மு. கருணாநிதி அவர்கள், தி மு. கழகக் கொள்கைகளை விவரித்தும், தேர்தலில் கழகத் தோழர்களை ஆதரிக்குமாறும் கேட்டுக்கொண்டு உரையாற்றினார்.

அவர் பேசும்போது, தி. மு. கழகத் தோழர்கள் எத்தொகுதிகளில் போட்டியிடுகின்றனர் என்பதை அறிவித்ததும், கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான உள்ளூர்—வெளியூர் பொதுமக்கள் அனைவரும் மகிழ்ச்சிப்பெருக்கால் பெருத்த ஆரவாரம் செய்த காட்சி, அசைக்க முடியாத நம்பிக்கையை நமது கழகத் தோழர்கட்கு ஊட்டுவதாக அமைந்திருந்தது.

கூட்டத்தில், தி. மு. கழகத் தேர்தல் நிதிக்கு ரூ. 100 தோழர் மு. கருணாநிதி அவர்களிடம் அளிக்கப்பட்டது.

உண்டியல் மூலம் வசூலிக்கப்பட்ட ரூ. 31—4—7-ம் தேர்தல் கூட்டச் செலவுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. (ந. தி.)

கம்யூனிஸ்டுகளின் ஜனநாயக வேஷம் அம்பலம்

பலாத்காரத்தை உள்ளடக்கியதே அவர்கள் கோட்பாடு!

இன்று மறுத்தால் அவர்கள் கம்யூனிஸ்டுகள் அல்ல!

பண்டித நேரு விளக்குகிறார்

சென்னை, பிப். 1—

"கடந்த ஓராண்டுக் காலமாக—அதிலும் குறிப்பாக, கடந்த ஆறுமாத காலமாகக் கம்யூனிஸ்டுகளுக்குப் பல அதிர்ச்சிகள் ஏற்பட்டன; அந்த அதிர்ச்சிகள், சந்தேகமின்றி கம்யூனிஸ்டுகளைப் பலமாகப் பாதித்திருக்கின்றன. இந்த அதிர்ச்சிகளுக்குப் பிறகு மறுபடியும் தங்களைச் சரிசெய்துகொள்ள கம்யூனிஸ்டுகள் வெகுவாகப் பாடுபடுவதை நான் அறிவேன்.

"ஹங்கேரி, ஒரு பெரிய அதிர்ச்சி! உணர்ச்சியுடைய அனைவருக்கும் அது ஒரு அதிர்ச்சியாகத்தான் இருக்கமுடியும்!

"ஹங்கேரியில் நிகழ்ந்தனவற்றைக் குறித்துத் தாங்கள் அதிர்ச்சியுற்றதுபோல நடித்துவிட்டுப்பின்னர் கம்யூனிஸ்டுகள், 'அவை அத்தனையும் சரியானவையே' என்று பேசுகின்றனர்.

"நான் இப்போது ஹங்கேரிபற்றிப் பேசவில்லை; ஆனால், திரும்பத் திரும்பச் சொல்ல விரும்புகிறேன்—கம்யூனிஸ்டுகள் ஒரு கொள்கையை வகுக்கும் மனோநிலையில் இல்லை. உறுதியான கட்டுப்பாட்டு உணர்ச்சி அவர்களுக்கு இருக்கிறது; ஆனால், அதற்கு அப்பால், அவர்கள் கொள்கைக்குப் பின்னாலுள்ள கோட்பாடுதான் என்ன? 'பார்லிமெண்டரி ஜனநாயகத்தை ஊக்குவிக்கும் கோட்பாடா, அது' என்று கேட்க விரும்புகிறேன். நிச்சயமாக இல்லை. அது, 'பாட்டாளிகளின் சர்வாதிகார சாம்ராஜ்ய'த்தைச் சிருஷ்டிக்கும் கோட்பாடு; பலாத்காரம் உட்படப் பல விஷயங்கள் அடங்கிய கோட்பாடு; பலாத்காரத்தில் ஈடுபடும் நோக்கம் இப்போது அவர்களுக்கு இல்லை என்பதும் எனக்குத் தெரியும்.

"இந்த 'பாட்டாளிகளின் சர்வாதிகாரம்' என்பன போன்ற விவகாரங்களை, காலம் கடந்துபோனவை என்றே நான் கருதுகிறேன்; எக்காலத்திலும் அந்தக் கோட்பாடு தவறானது என்று நான் கூறவில்லை.

"ஐரோப்பாவில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியில் அது சரியானதாக இருந்திருக்கலாம்; ஆனால் நாம் இப்போது இந்தியாவில் இருபதாம் நூற்றாண்டின் மத்தியில் வாழுகிறோம்.

"இந்தக் கோட்பாடுகள் உருவான நேரத்தில், உலகில் எந்த நாட்டிலும் ஜனநாயகம் இருக்கவில்லை. ஜனநாயக நாடுகள் என்றழைக்கப்பட்ட நாடுகளில்கூட நிலப் பிரபுக்கள்போன்ற, மக்களில் ஒரு சிலருக்கு மட்டுமே வாக்குரிமை இருந்தது. ஆனால், இந்தியாவில் இன்று பார்லிமெண்டரி ஜனநாயகம் இருக்கிறது; எல்லா மக்களுக்கும் வாக்குரிமை இருக்கிறது; அந்த நிலையில், இந்தியாவில் 'சர்வாதிகாரம்' என்று பேசுவதெல்லாம் தர்க்கரீதியானவை அல்ல!

"கம்யூனிஸ்டு கட்சியின் கோட்பாடுகள், இப்போதுள்ள அரசியல் சட்டத்தை ஒழித்துவிட்டுத்தான் ஈடேற்றப்படக்கூடியனவாகும்.

"நான் கூறுவது தவறானால், தங்கள் நிலையைத் தெளிவாக்க வேண்டியவர்கள் கம்யூனிஸ்டுகளே. அப்படிச் செய்தால், அவர்கள் கம்யூனிஸ்டுகள் அல்ல—வேறு யாரோ என்று கருதவேண்டி வரும்; அல்லது, கம்யூனிசம் ஒரு புதிய திருப்பத்திற்கு உள்ளாகியிருக்கிறது என்று கருத வேண்டிவரும்"

என்று பண்டித நேரு அவர்கள், நேற்று மாலை சென்னை-ஐலண்டு மைதானத்தில் நடைபெற்ற காங்கிரஸ் கட்சிப் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

ஈ. வெ. கி. சம்பத்

தர்மபுரி, பெண்ணாகரம் தொகுதிகளில் சுற்றுப்பயண நிகழ்ச்சிகள்:

பிப். 5 :—

காலை 9 மணி: இலக்கியம்பட்டி
,, 11 ,, பாப்பாரப்பட்டி
மாலை 2 ,, பாலக்கோடு
,, 4 ,, மாராண்டஅள்ளி
,, 6 ,, காரிமங்கலம்
இரவு 7 ,, மாட்லாம்பட்டி
,, 8 ,, தர்மபுரி

* * *

4—2—57 மாலை 5 மணிக்கு காடையாம்பேட்டை சந்தைத்திடலில் நடைபெறும் கூட்டத்திலும் மாலை 6½ மணிக்கு, மகுடஞ்சாவடி கழகத் துவக்க விழாவிலும் இரவு 8 மணிக்கு, இடைப்பாடி பொதுக் கூட்டத்திலும் தோழர் ஈ. வெ. கி. சம்பத் கலந்துகொள்வார். இந்நிகழ்ச்சிகளில் தோழர்கள் ப. கண்ணன், ப. இராமலிங்கம், இரா. தாண்டவன், ஏ. கே. கே. இராசமாணிக்கம் ஆகியோரும் கலந்துகொள்வர்.

சென்னை 36-வது வட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கட்கு:

3—2—57 காலை 10 மணிக்கு கிளைக் கழக இல்லத்தில் (எண் 18 மாமபலம் ஐரோடு) கிளைக் கழகப் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும். கிளைத் துவக்க விழா குறித்து ஆலோசிக்கப்படும்.

சென்னை பாரதிதாசன் நூல் நிலைய ஆண்டு விழா

3-2-56 மாலை 6 மணிக்கு சென்னை—அயன்புரம் பாரதிதாசன் நூல் நிலைய 6-வது ஆண்டு விழா, மார்க்கெட் மைதானத்தில் தோழியர் சத்தியவாணிமுத்து தலைமையில் நடைபெறும் தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி மற்றும் பலர் சொற்பொழிவாற்றுவர்.

திருப்புத்தூர் அழகிரி படிப்பக ஆண்டு விழா

3—2—57 மாலை 6 மணிக்கு இராமநாதபுரம் மாவட்டம் திருப்புத்தூர் அழகிரி படிப்பக ஆண்டு விழாப் பொதுக்கூட்டம் தோழர் பி. பி. எம். பிச்சை தலைமையில் நடைபெறும். தோழர்கள் காஞ்சி-கல்யாணசுந்தரம், கண்ணதாசன், எஸ். எஸ். தென்னரசு, ஆ. குருசாமி ஆகியோர் பேசுவர்.

திருமணங்கள்

4—2—57 காலை 9 மணிக்கு பெரியதப்பூர் மணமகன் இல்லத்தில் தோழர் இளஞ்சேரன் தலைமையில் தோழர் தெட்சணாமூர்த்தி—தோழியர் செல்லம்மாள் திருமணம் நடைபெறும்.

* * *

3—2—57 காலை 9 மணிக்கு, சென்னை—ஆல்தோட்டம் ரகுல் உமாரா பகதூர் 1-வது தெரு; எண் 53-ல் தோழர் தி. கோ. அரசு தலைமையில் தோழர் எஸ். அருள்தாஸ்—தோழியர் டி. விமலி திரசா திருமணம் நடைபெறும். தி. மு. க. துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் தோழர் இரா. செழியன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

3—2—57 காலை 8½ மணிக்கு குணியமுத்தூரில், தோழர் எம். நமச்சிவாயம் தலைமையில் தோழர் எம். சுந்தரம் முன்னிலையில் தோழர் தங்கமாணிக்கம்—தோழியர் ப. சரோஜனி திருமணம் நடைபெறும். தோழர்கள் பழனியப்பா, வேலுசாமி, சு. ஆறுமுகம் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

4—2—57 காலை 9 மணிக்கு, ஈரோடு பழையகோட்டைப் பட்டக்காரர் இல்லத்தில், தோழர் சி. எஸ். ஆர். மாணிக்கம்—தோழியர் சாவித்திரி திருமணம் நடைபெறும்.

புதுவை தி. மு. கழகத் தோழர்கட்கு:

"3—2—57 மாலை 3½ மணிக்கு, கழக இல்லத்தில், கழகப் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும். சென்ற ஆண்டுக் கழக நடவடிக்கைகள், வரவு-செலவுகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்," என்று புதுவை தி. மு. கழகச் செயலாளர் ச. சிவப்பிரகாசம் அறிவிக்கிறார்.

சேலம் திருக்குறள் கழகம் 10-வது ஆண்டு நிறைவு விழா

3—2—57 அன்று, சேலம்—செவ்வாய்ப்பேட்டை கண்டகாரத் தெரு, மீனாட்சி அம்மன் கோவிலில், திருக்குறள் கழகப் பத்தாவது ஆண்டு நிறைவு விழா திரு. பி. ஹெர்பர்ட் சுந்தரம் தலைமையில் நடைபெறும். தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், மற்றும் பலர் சொற்பொழிவாற்றுவர்.

வ. ஆ. மாவட்டத் திருவள்ளுவர் கழகச் செயற்குழு

3—2—57 பகல் 1 மணிக்கு, வ. ஆ. மாவட்ட திருவள்ளுவர் மத்தியக் கழகச் செயற்குழுக் கூட்டம் வாணியம்பாடி ஆம்பூர் பேட்டை பூக்கடை தெருவிலுள்ள திருவள்ளுவர் கழக நிலையத்தில் நடைபெறும்.

மதுரையில் தி. மு. க. தேர்தல் நிதி சிறப்புக் கூட்டம்

3—2—57 காலை 9 மணிக்கு, மதுரை நகர தி. மு. கழகச் சார்பில், பழனி டாக்கீசில், தி. மு. கழகத் தேர்தல் நிதிக்காகச் சிறப்புக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் கி. மனோகரன், கண்ணதாசன் ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவாற்றுவர்.

தி. மு. கழகத் தேர்தல் நிதி நாடகம்

3—2—57 இரவு 10 மணிக்கு, திருச்செங்கோடு தனலட்சுமி டாக்கீசில் நிறந்த வெளி அரங்கில், தி. மு. கழகத் தேர்தல் நிதிக்காக நடிப்பு-இசைப் புலவர் கே. ஆர். இராமசாமி அவர்கள் குழுவினர் நடிக்கும் 'வேலைக்காரி' நாடகம் நடைபெறும்.

ஆடுதுறை தொகுதியில் கழகக் கூட்டங்கள்

3, 5, 10-2-57 ஆகிய மூன்று நாட்களிலும் முறையே அதிராமங்கலம், செப்புக்கோயில், மேலகாடூர் ஆகிய இடங்களில் தி. மு. கழகப் பொதுக்கூட்டங்களில் தோழர்கள் பொ. தருமன், ம. கோ. மணி, அசோகன், தமிழ்வேந்தன், தாண்சீனுவாசன் ஆகியோர் பேசுவர்.

கழகக் கூட்டங்கள்

★

திருச்சி :

டவுன் ஆல் முன்
3—2—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : ஆர். நாகசுந்தரம்
பேசுவோர் :
கி. மனோகரன்
எஸ். நெடுமாறன்
ஐ. எம். சரீப்
எம். எஸ். மணி

★

பணிக்கம்பட்டி :

(குளித்தலை வட்டம்)
அழகிரி திடலில்
3—2—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : அ. பொம்மு
பேசுவோர் :
மு. கருணாநிதி
அ. பெ. தர்மலிங்கம்
மதிவாணன்
மீ. சு. இளமுருகுபொற்செல்வி

★

மகுடஞ்சாவடி :

சின்னுண்டிபாளையம்மைதானத்தில்
4—2—57 மாலை 6½ மணிக்கு
கிளைக் கழகத் துவக்கவிழா
தலைவர் : ப. கண்ணன்
கொடியேற்றுபவர் :
ஏ. கே. கே. இராசமாணிக்கம்
துவக்குபவர் : ப. இராமலிங்கம்
பேசுவோர் :
ஈ. வெ. கி. சம்பத்
இரா. தாண்டவன்

★

விளாப்பாக்கம் :

3—2—57 மாலை 6-மணிக்கு
பேசுவோர் :
வே. அ. இளஞ்செழியன்
வி. மு. கரிகாலன்

★

துறையூர் :

பிள்ளையார்கோவில்மைதானத்தில்
4—2—57 மாலை 6-30மணிக்கு
தலைவர் : பி. ஆர். இரத்தினசாமி
பேசுவோர் :
கி. மனோகரன்
எஸ். நெடுமாறன்
அரு. ஆதிமூலம்

★

மேட்டூர் அணை :

சினிமா கொட்டகைக்கு எதிரில்
3—2—57 மாலை 7 மணிக்கு
பேசுவோர் :
ஈ. வெ. கி. சம்பத்
க. கு. சின்னசாமி
அ. ச. பாலு

சென்னை—2-வது வட்டத் தோழர்கட்கு:

2—2—57 மாலை 5 மணிக்கு சென்னை—2-வது வட்டத் தி. மு. கழகப் பணிமனையில், தேர்தல் ஆலோசனைக் கூட்டம் நடைபெறும். கிளைக் கழகம், சார்பு மன்றங்கள், படிப்பகத் தோழர்கள் அனைவரும் கலந்துகொள்ள வேண்டப்படுகிறார்கள். இக்கூட்டத்தில், தொகுதி அபேட்சகர் என். ஜீவரத்தினம் கலந்துகொள்வார்.

டாக்டர் அம்பேத்கார் நினைவு நாள் பொதுக்கூட்டம்

2—2—57 மாலை 5½ மணிக்கு சென்னை - பெரம்பூர் ஏரி மைதானத்தில், பெரம்பூர் தென்பகுதி இரயில்வே தொழிலாளர்கள் சார்பில், டாக்டர் அம்பேத்கார் நினைவு நாள் பொதுக்கூட்டம் திரு. எம். ஜே. வேலு தலைமையில் நடைபெறும். தோழர்கள் ஏ. இரத்தினம், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, ஜி. உமாபதி, மற்றும் பலர் பேசுவர். மாலை 2 மணிக்கு, புழலிலிருந்து ஊர்வலம் புறப்படும்.

தொகுதிக் குழுக் கூட்டங்கள்

★

சென்னை—எழும்பூர் :

1—2—57 மாலை 6 மணிக்கு, சென்னை 26-வது வட்டம் (பெரியமேட்டு) தி. மு. கழகப் பணிமனையில் தி. மு. கழகத் தேர்தல் பணி ஆதரவாளர்கள் கூட்டம் நடைபெறும். தோழர் க. அன்பழகன் கலந்துகொள்வார்.

அன்று இரவு 7½ மணிக்கு சென்னை பார்க்டவுன் (28-வது வட்டம்) தி. மு. கழகக் கிளைச் சார்பில், தோழர் சி. டி. டி. அரசு இல்லத்தில் (எண் 11, பொம்மிசெட்டி தெரு) தேர்தல் குழு அமைப்புக் கூட்டம் நடைபெறும். தோழர் க. அன்பழகன் கலந்துகொள்வார். கிளைக் கழகங்கள், சார்பு மன்றம், படிப்பகங்கள் அனைத்தும் கலந்துகொள்ளக் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

* * *

4—2—57 மாலை 6 மணிக்கு, சென்னை 25-வது வட்டம் (வேப்பேரி) தி. மு. கழகத் தேர்தல் குழு அமைப்புக் கூட்டம், தோழர் க. அன்பழகன் இல்லத்தில் (எண் 10, வேளாளர் தெரு, புரசை) நடைபெறும். கிளைக் கழகங்கள், சார்பு மன்றங்கள், படிப்பகங்களைச் சேர்ந்த தோழர்கள் ஆதரவாளர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தேர்தல் ஊர்வலங்கள்

★

சென்னை-பேசின்பிரிட்ஜ் :

3—2—57 காலை 7 மணிக்கு, சென்னை — பேசின்பிரிட்ஜ் தொகுதி தி. மு. கழக அபேட்சகர் தோழர் என். வி. நடராசன் அவர்கள் முன்னிலையில், தேர்தல் ஊர்வலம் நடைபெறும். இத்தொகுதியைச் சேர்ந்த கழகக் கிளைகள் (5, 7, 8, 16, 27-வது வட்டங்கள்), மன்றங்கள், பிற அமைப்புகளைச் சேர்ந்த தோழர்கள் அனைவரும் ஊர்வலத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஒற்றைவாடை தியேட்டருக்கு எதிரிலுள்ள பிள்ளையார் கோயில் தெரு 27-வது வட்டத் தி. மு. கழக அலுவலகத்திற்கு முன் இருந்து ஊர்வலம் புறப்படும்.

சென்னை—பெரம்பூர் :

3—2—57 காலை 7 மணிக்கு, சென்னை—பெரம்பூர் தனித் தொகுதி தி. மு. கழக அபேட்சகர் தோழியர் சத்தியவாணிமுத்து முன்னிலையில், தேர்தல் ஊர்வலம் நம்மாள்வார்பேட்டை சின்னபாபு தெருவிலுள்ள 23-வது வட்டத் தி. மு. கழக இல்லத்திலிருந்து புறப்படும். தொகுதியைச் சேர்ந்த 6, 17, 18, 19, 20, 21, 23, 24-வது வட்டத் தி. மு. கழகக் கிளைகள், சார்பு மன்றங்கள், படிப்பகங்களைச் சேர்ந்த தோழர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.